ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** நாணயத் திணைக்களம்
**திகதி** 2018.11.27

## இலங்கை சமிக்ஞைப் படையணியின் 75ஆவது ஆண்டு நிறைவினை குறிக்கும் முகமாக ஞாபகார்த்த நாணயக் குத்தியொன்று வெளியிடப்படுகின்றது

இலங்கை மத்திய வங்கி, இலங்கை சமிக்ஞை படையணியின் 75ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் முகமாகவும் 75 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக நாட்டிற்கு அது ஆற்றிய அரும் பணிக்கு அங்கீகாரமளிக்கும் விதத்திலும் ரூ.10 முகப்புப் பெறுமதியினைக் கொண்ட சுற்றோட்ட நியம ஞாபகார்த்த நாணயக் குத்தியொன்றினை வெளியிட்டிருக்கின்றது. முதலாவது நாணயக் குத்தி உத்தியோக பூர்வமாக மாண்புமிகு பிரதம மந்திரியும் நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமான திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களினால் 2018 நவெம்பர் 27ஆம் நாளன்று கையளிக்கப்பட்டது.

இந்நாணயக் குத்தியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக சுற்றோட்டத்திற்கு வழங்கப்படவுள்ளதுடன் ஏற்கனவே சுற்றோட்டத்திலுள்ள ஏனைய நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுடன் சேர்ந்து கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தப்படக்கூடியதாகவிருக்கும்.

**விபரங்கள்**

| | |
|---|---|
| நாணய இனம் | ரூ.10 |
| நாணயக் குத்தி வகை | சுற்றோட்ட நியமம் |
| தொகை | 5,000,000 குத்திகள் |
| உலோகம் | கறைபடியாத உருக்கு - AISI 430 |
| விட்டம் | 26.40 மி.மீ |
| தடிப்பு | 1.80 மி.மீ |
| வடிவம் | 11 கோணங்கள் |
| ஓரம் | சாதாரணம் |

**நாணயக் குத்தியின் விபரங்கள்**

| முன்பக்கம் | பின்பக்கம் |
| --- | --- |
|   |   |
| நாணயக் குத்தியின் மத்தியில் காணப்படும் ஹேர்ம்ஸ் தெய்வத்தின் உருவம் மிகச்சிறந்ததும் விரைவானதுமான செய்திப் பரிமாற்றங்களின் காரணமாக பல யுத்தங்களை வெற்றிகண்ட இலங்கை சமிக்ஞை படையணியின் ஈடுபாட்டினை எடுத்துக்காட்டுகின்றது. பின்னணியில் காணப்படும் கோளம் இலங்கை சமிக்ஞை படையணி அதன் தொழில்நுட்பத்திலும் குறிக்கோளிலும் என்றும் வளர்ந்து வருவதனை எடுத்துக்காட்டுகின்றது. இதன் கருத்து உலகளாவிய ரீதியில் இது நன்கு அறியப்பட்டிருக்கின்றது என்பதேயாகும். இது சின்னத்தின் இரண்டு பக்கங்களிலும் ஆறு நட்சத்திரங்களை கொண்டிருப்பதானது கட்டளை, கட்டுப்பாடு, தொடர்பூட்டல், கனணி, சைபர் மற்றும் உளவறிதல் ஆகியவற்றினை துலாம்பரப்படுத்துவதாகக் காணப்படுகின்றது. மேலேயுள்ள தர்ம சக்கரம் இலங்கை சமிக்ஞை படையணியின் ஒழுக்காற்றலையும் கௌரவத்தினையும் வலியுறுத்துவதாகவுள்ளது.<br><br>நாணயக் குத்தியின் அடிப்பாகம் சமிக்ஞைப் படையணியின் 75ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக வெளியிடப்பட்டமையினை எடுத்துக்காட்டுகிறது. ஆண்டு 2018 நாணயக் குத்தியின் அடியில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் பெயர் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நாணயக் குத்தியின் ஓரமாகக் காணப்படுகின்றது. | நாணயக் குத்தியின் மையத்தில் நாணயக் குத்தியின் முகப்புப் பெறுமதியான “10” பெரிய இலக்கங்களிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சொற்களிலும் காணப்படுகின்றது. தாமரை இதழ்கள் வட்டமாக நாணயக் குத்தியின் சுற்றுப்புறத்தில் காணப்படுகின்றன. |

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து பின்வரும் தொலைபேசிகளில் தொடர்புகொள்ளவும் :-


இலங்கை மத்திய வங்கி : தொலைபேசி : 0114387405/ 0112477354

மின்னஞ்சல் : currency@cbsl.lk

இலங்கை சமிக்ஞைப் படையணி : தொலைபேசி : 0112342818/ 0112855361

மின்னஞ்சல் : slscanniversary@army.lk

கண்காணிப்பாளர்

நாணயத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

இல.30 சனாதிபதி மாவத்தை

கொழும்பு 01

இலங்கை